# ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# லூக்கா 10:2

**அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.**

---

*செய்தி:* 61-1112 - **கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்** - Jeffersonville, Indiana, USA

---

73. அவர்கள் அனைவரும் அந்தப் பெண்ணத்தை உடைத்தெறிந்து விட்டு, "நாங்கள் கோட்பாடுகளையும், எங்கள் பிரமாணப் புத்தகத்தி லுள்ளவைகளையும் மறந்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு திரும்புகிறோம்" என்று கூறுவார்

களானால், அப்பொழுது என்ன நடக்கிறதென்று பாருங்கள். தேவன் அவர்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார். அவர் நிச்சயம் அப்படி செய்வார். **அவர்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தால், தீர்க்க தரிசியை தேவன் அவர்களிடம் அனுப்புவார். முதலாவதாக அவர்கள் ஜெபிக்க வேண்டும். தேவன் அதற்காக காத்திருக்கிறார். ஜனங்களுக்கு அதில் ஒரு பங்கு இருக்க வேண் டும் என்று தேவன் விரும்புவது விசித்திரமல்லவா? இயேசு அறுப் புக்கு ஆயத்தமாயிருந்த பயிர்களைக் கண்டபோது, "அறுப்புமிகுதி, வேலை யாட்களோ கொஞ்சம். நீங்கள் அறுப் புக்கு எஜமானை வேண்டிக் கொள்ளுங் கள் (அது அவர்), அறுப்புக்கு வேலை யாட்களை அனுப்பும்படி என்னிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார்.** (மத். 9:37-38). **நீங்கள் ஏற்க வேண்டிய ஒரு**

பாகமும் அதில் உண்டு. தேவன் தம்முடைய சபை அவரை நோக்கிக் கூப்பிடுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார். அவர் எக்காலத்தும் அவ்வாறே செய்து வந்திருக்கிறார். தமது ஊழியக்காரனை செயல்படுத்த, ஜனங்கள் தம்மை நோக்கிக் கூப்பிட வேண்டுமென்று தேவன் இன்று காத்துக் கொண்டிருக்கிறார். ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் முகங்குப்புற விழுந்து, தங்களை மீட்க ஒருவனை அனுப்ப வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணின வரைக்கும். அவர்களால் அற்புதங்களும், அடையாளங்களும் நடப்ப

**தைக் காண முடியவில்லை.** தேவன் அவர்களை மீட்பதற்கென ஒருவனை வைத்திருந்தார். **இஸ்ரவேல் ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும், தேவன் ஒரு தீர்க்கதரிசியை வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் வைத்திருந்து அதற்காக காத்திருந்தார். அவர்கள் ஜெபம் பண்ணத் தொடங்கினவுடனே, தேவன் மீட்பனை அனுப்பினார். இன்றைக்கும் ஜனங்கள் ஒன்றுகூடி ஜெபம் செய்வார்களானால், தேவன் அதையே செய்வார்.** சரி! எலியா அந்த கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், ஆகாபுக்கும். அவன் தேவனுடைய ஊழியக்காரன் என்னும் அடையாளமாயிருந்தான். அவன் தேவனுடைய தீர்க்கதரிசி. அவன் விருப்பப்படி அவனால் வானத்தை திறக்கவும், மூடவும் முடியும் என்பதன் மூலம் அவன் இஸ்ரவேலுக்கு அடையாளமாயிருந்தான். அவன் நிச்சயம் அப்படியிருந்தான். வானத்தை மூடக்கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனைத்

தவிர வானங்களைத் திறக்கக் கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனு டைய வார்த்தை - தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளிடத்தில் உள்ளது.